| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செங்கோடகவுண்டர் | நாள் | 25.02.2021 |
| தகப்பனார் பெயர் | சின்னநாச்சியப்பன் | | |

2, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உறவுமுறைகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள வரைபடம் குறித்து என்னால் கூறமுடியுமா என்றால் முடியாது. வழக்கில் உறவுமுறைகள் குறித்து கூறாததற்கு என்ன காரணம் என்றால் உறவினர் என்பது தெரியும் என்பதால் கூறவில்லை. வழக்குரையில் சர்வே எண்கள். 273/2, 3, 5, 6 ஆகியவற்றை குறித்து கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். நான் கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சர்வே எண்களை வழக்குரையிலும், சொத்துவிபரத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.277 எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் முதலில் தெரியும். தற்போது ஞாபகமில்லை. கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள நீதிப்பேராணை மனு எண்.6207/2020 என்ற வழக்கு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். ஆனால் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் நீதிப்பேராணை அனுமதிக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் எங்களுடைய சொத்து தான். இன்றைய தேதிவரை பணம் நீதிமன்றத்தில் தான் உள்ளது எனவும், யாரும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். உண்மையிலேயே எங்களுக்கு உரிமையாக இருந்திருந்தால் எடுத்திருப்போம் எனவும், உண்மையை மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்திருக்கமாட்டோம் என்றால் சரியலல. 2ம் பிரதிவாதி மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்களில் உள்ள சொத்துக்களில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் எங்களுடைய சொத்து தான். 2, 5 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பத்திரங்கள் செல்லாது எனவும், வழக்கு சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது எனவும் பரிகாரம் கோரவில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் அவ்வாறு கேட்கவில்லை எனவும், பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனது தரப்பில் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டார் என்றால் ஆமாம். பழைய சர்வே எண்ணிலுள்ள சொத்துகளை

அளப்பதற்கு தான் மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் அனைத்து சொத்துக்களுக்காகவும் தான் மனு தாக்கல் செய்திருந்தேன். 6 ஏக்கர் 60 சென்ட் எங்களுடைய குடும்ப சொத்து எனவும், அதில் பிரதிவாதிகள் பிரச்சினை செய்யவில்லை என்றால் ஆமாம். பழைய சர்வே எண்ணை வைத்து அளக்க முடியாது என கிராம நிர்வாக அலுவலரும், அளவையரும் நீதிமன்றத்தில் மனு கொடுத்தனர் என்றால் இல்லை. அதன் அடிப்படையில் ஆணையாளர் பார்வையிட்டு அவரும் அளக்க முடியாது எனக்கூறி மனு செய்தார் எனவும், எங்களுடைய இஷ்டத்திற்கு ஒரு சில எண்களை கொடுத்து உத்தரவு பெற்று அளந்தோம் என்றால் இல்லை. 2 மற்றும் 8 பிரதிவாதிகள் வழக்கறிஞர்களை தவிர மற்ற பிரதிவாதிகளுக்கு ஆணையர் அறிவிப்பு கொடுக்காமல் பார்வையிட்டார் என்றால் அவர்கள் அப்போது வழக்கில் ஆஜராகவில்லை. முழுவதுமாக அளக்கும்போது உடனிருந்தேன் என்றால் ஆமாம். வழக்குரை 1 வது பகுதியில் காண்பிக்கப்பட்டுள்ள 3 ஏக்கர் 30 சென்ட் அளக்கப்பட்டதா என்றால் இல்லை. அடுத்ததாக உள்ள 3 ஏக்கர் 30 சென்டை அளந்தோமா என்றால் இல்லை. ஏகமாக தான் அளந்தோம். ஏகமாக கொடுக்காமல் தனிதனியான சொத்து விபரத்தை வழக்குரையில் கூறியுள்ளோமா என்றால் அது பத்திரத்தில் உள்ளது போல் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துவிபரத்தில் அரசாங்கம் மயான பாதைக்கு எடுத்துக்கொண்ட 5 1/2 ஹெக்டேருக்கும் மற்றும் மயானத்திற்கு எடுத்த 6 ஹெக்டேருக்கான சர்வே எண்களை கூறவில்லை என்றால் எல்லாம் ஒன்றாக உள்ளதாக தான் நினைத்துக் கொண்டிருந்தோம். தற்போதைய திருத்தப்பட்ட வழக்குரையில் கூட புதிய சர்வே எண்களை கூறவில்லை என்றால் வழக்கிற்காக தற்போது எடுத்துப் பார்க்கும்போது தான் தெரிந்தது. இளையப்பனின் சொத்துக்களான 2 ஏக்கர் 20 சென்டை எங்களுக்கு தெரியாததால் தான் நீதிமன்ற ஆணையாளர் மூலம் அதனை கண்டுபிடிக்க மனு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. பொதுவில் 3 ல் ஒரு பாகம் என கூறி கிரையம் பெற்றதால் எந்த இடம் தெரியாமல் மணியும், ராஜாத்தியும் வாங்கியதற்கு பின்னிட்டு அவர்களை தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காக நிறைய சொத்துக்களை காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அளக்காத சொத்தை அளந்ததாக நீதிமன்ற ஆணையாளர் மற்றும் அளவையர் வரைபடம் தாக்கல் செய்துள்ளதால் தான் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்றால் அளந்தனர். எனவே தான் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையை நீக்கறவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் அடிப்படையில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் நாங்கள் ஆஜராகி உள்ளோம் என்றால் ஆமாம். எனவே நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்ய அனைத்து ஆவணங்களும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. இளையப்பனின் சொத்துக்களான 3ல் ஒரு பாகம் சொத்து குறித்து எனக்கு தெரியாமல் மணி மற்றும் ராஜாத்தி பெயரிலுள்ள சொத்துக்களை குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்கு செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி மணி மற்றும் ராஜாத்தி பெயரில் உள்ள ஆவணங்கள் செல்லாது என மாவட்ட பதிவாளர் மற்றும் உயரதிகாரிகளுக்கு மனு அளிக்கப்பட்டு அந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டு அந்த பத்திரங்கள் உண்மையானது என கூறியுள்ளனர் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டும் செல்லாது என்ற பரிகாரத்தை கோரவில்லை என்றால் சரியல்ல. ராஜாத்தி மற்றும் மணியை இடையூறு செய்யும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் வழக்கில் கூறாத சங்கதிகளையும், சர்வே எண்களையும் கூறியுள்ளதால் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே மணி மற்றும் ராஜாத்தி பெயரிலுள்ள பத்திரங்கள் குறித்து அ.வ.எண்.176 மற்றும் 60 ஆகியவை நிலுவையில் உள்ள நிலையில் பொய்யான காரணங்களுடன் பொய்யான சர்வே எண்களுடன் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

11 முதல் 13 பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.